ஒலி) அந்த வகையில், மதுரை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில், 21 பள்ளி மாணவியர் விடுதிகள், 7 பள்ளி மாணவர்கள் மற்றும் 4 கல்லூரி விடுதிகள் உட்பட 32 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, மதுரை மாவட்டத்தில் 5 கள்ளர் பள்ளி மாணவியர்கள் விடுதி மற்றும் 24 கள்ளர் சீரமைப்புப் பள்ளி விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. எனினும், மேலூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் மாணவியர் விடுதி தொடங்க தேவை இருப்பின், மாண்புமிகு தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவர்களின் ஆணைக்கிணங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 407, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

407—

சுனாமி எச்சரிக்கை மையம்

***22337—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் சுனாமி எச்சரிக்கை மையம் அமைக்கும் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என்.டி வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

உலக வங்கி நிதி உதவியுடன் பேரிடர் அபாயம் குறைக்கும் திட்டத்தின் மூலமாக பேரிடர் முன்னெச்சரிக்கை செய்யும் கருவி அமைக்க கன்னியாகுமரி மாவட்டமும் தெரிவு செய்யப்பட்டு, ஆயத்தப் பணிகள் நடந்து முடிந்துள்ளன. முன்னெச்சரிக்கைக்

கருவிகள் அமைக்க இரண்டாம் கட்ட விலைப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டதும் கருவிகள் நிறுவி பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது முட்டம், குளச்சல், கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் இந்தக் கருவிகள் நிறுவப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். புனித அந்தோணியார் பள்ளியின் அருகில்கூட ஒரு கருவி நிறுவப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், அவையெல்லாம் மிகவும் துருப்பிடித்த நிலையில் இருக்கின்றன. அவையெல்லாம் மாற்றப்பட்டு புதிய கருவிகள் அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அவர்களுடைய உதவியுடன் ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் 30 இடங்களில் நிறுவப்பட்ட இயற்கைச் சீற்ற முன்னெச்சரிக்கைக் கருவிகள் பழுதடைந்து உபயோகிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால், இந்த 30 இடங்கள் கூடுதலாக 3 இடங்களைத் தெரிவு செய்யப்பட்டு, மொத்தம் 33 இடங்களில் இயற்கைப் பேரிடர்கள் குறித்து முன்னெச்சரிக்கை செய்யும் கருவிகள் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல் முறையாக ஏறத்தாழ 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே தமிழகத்தில் பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையில், உலக வங்கி நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் பேரிடர் அபாயம் குறிக்கும் திட்டத்தின்கீழ் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்மூலம் தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டம்*

2013 மே 6]

உட்பட 13 கடலோர மாவட்டங்களில் 439 கடலோரக் குடியிருப்புகளில் முன்னெச்சரிக்கைக் கருவிகள் நிறுவ தகுதியான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆயத்தப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒரு கருவியினுடைய தோராய விலை 10 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு மிக விரைவிலே அது செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

முற்பகல் 10—55

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை சம்பந்தப்பட்டது என்பதால் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம் மிகுந்த வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. குடிதண்ணீருக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. டெல்டா அல்லாத . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேட்க வேண்டாம். சுனாமியைப் பற்றிக் கேளுங்கள். இல்லையென்றால் உட்கார்ந்துவிடுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் இது ஒரு முக்கியமான கேள்வி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 408, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, தனிக் கேள்வி போடவும், உட்காருங்கள். அடுத்த துணைக் கேள்விக்குப் பதில் சொல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்துவிட்டேன், உட்காருங்கள்.